முருகப்பெருமான் துணை

**மகான் ஜனகமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**08.09.2021**, புதன்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அவதாரமாக வந்த தேசிகா
மாறுதலை கலியில் செய்ய வேண்டி
மகா சக்தியாக வந்த குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ யாளி திங்கள்
இருபான் சூல திகதி கணக்கன் வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 23ம் நாள், 08.09.2021, புதன்கிழமை)
இயம்பிடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை ஜனகமகரிஷி யானும்
அருளுவேன் உலக நலம்பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வலம்வந்து அரங்கன் குடிலை
4. குடிலை காத்து வருதல் காண
குவலயத்தார் பிரணவக் குடிலை
குடிலை அனுகி வருதல் காண
குவலயத்தின் சகல இன்னலும் விலகி
5. விலகியே நல் பாதுகாப்பும்
வினவிட வரமாக வந்துமே
உலகமெங்கிலும் ஞானிகள் துணை
உயிர் பாதுகாப்பாகவும் மாறி
6. மாறியே மக்களை காப்பதில்
மாதருமம் முதன்மை நிலையாகி
ஆறுமுக அரங்கமகா ஞானியின்
அறமே சகலதுமாக இறங்கிட
7. இறங்கிட கலியுகம் தன்னில்
இல்லாமை விலகி நன்மைபலன்
வரங்களாக எங்கும் நிலவும்
வறுமை விலகும் அமைதி உலவும்
8. அமைதி மிக்க ஞானபூமியாக
அகிலம் அரங்கன் தயவால்
அமைதிமிக்க தொண்டர் படையால்
ஆளுமைகள் மாற்றம் கண்டு

9. கண்டுமே ஞான ஆட்சி
கந்த வேலன் வழிநடத்தும்
தொண்டுமிக்க ஆளுமையாக
தெய்வீக ஆட்சியாக மாறும்

10. மாறுதலை தரும் அரங்கன்
மகத்துவமிக்க நெறிதனை
ஆறுமுகனார் வழிபாடு தனை
அனைவரும் ஏற்று வருக

11. வருகவே வையகம் உயரும்
வளர்ச்சி மிகுந்து தேசமே
ஆறுமுகன் ஆளுமைக்கு வரும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—